# அ.தி.மு.க.வை பா.ஜ.க. அபகரித்து விட்டது!

# ஒட்டுமொத்த தேசத்திற்காகவும் முதல்வர் ஸ்டாலின் குரல் கொடுக்கிறார்!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

## டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தேர்தல் பிரச்சாரத்தில் பேச்சு!

சென்னை, ஏப். 22 –

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் கெஜ்ரிவால் நேற்று முன்தினம் பிரச்சாரம் செய்தார். அப்போது தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க.வை பா.ஜ.க. 3ஆக பிளந்துவிடும் என்று கெஜ்ரிவால் குறிப்பிட்டார். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து அ.தி.மு.க. மிகப் பெரிய துரோகத்தைச் செய்துவிட்டதாகத் தெரிவித்தார். மேலும், ஸ்டாலின் தமிழகத்திற்காக மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்திய தேசத்திற்காகவும் குரல் கொடுக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.**



சென்னையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் இணைந்து டெல்லி மாநில முன்னாள் முதல்வரும் ஆம் ஆத்மி கட்சித் தலைவருமான கெஜ்ரிவால் பிரச்சாரம் மேற்கொண்டார். சென்னை புளியந்தோப்பு பகுதியில் பிரச்சாரம் செய்தனர். “வணக்கம்” எனச் சொல்லி தமிழில் கெஜ்ரிவால் தனது உரையை தொடங்கினார். அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடப்பதைப் பார்க்க முடிகிறது. தமிழ்நாடு மக்கள் மத்தியில் பேசுவதைப் பெருமையாக நினைக்கிறேன். அ.தி.மு.க.வை பா.ஜ.க. முழுமையாகக் கைப்பற்றிவிட்டது. பா.ஜ.க. கட்டுப்பாட்டில் தான் அ.தி.மு.க. உள்ளது.

“பீகாரில் என்ன நடந்தது என்று பாருங்கள்.. நேற்று வரை முதல்வராக இருந்த நிதிஷ் குமாரை இன்று அந்த பதவியில் இருந்து நீக்கிவிட்டார்கள். இன்று அவர் சாதாரண எம்.பி.யாக ஆக்கிவிட்டார்கள்.

தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க. வை 3ஆக பா.ஜ.க. பிளந்துவிடும். அதன் பிறகு பா.ஜ.க. ஆட்டத்தை ஆரம்பித்து விடும். அவர்கள் தமிழ்நாட்டை ஆளத் துடிக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க. தேவையில்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து மிகப் பெரிய பாவத்தை அ.தி.மு.க. செய்துவிட்டது.

டெல்லியில் நாங்கள் இத்தனை காலமாகச் செய்த எல்லா நல்ல விஷயங்களையும் பா.ஜ.க. நிறுத்திவிட்டது. நாங்கள் ஆரம்பித்த பள்ளி, மருத்துவமனைகள் என எல்லாவற்றையும் நிறுத்திவிட்டார் கள். நாங்கள் மின்சாரம், தண்ணீரை இலவசமாகக் கொடுத்தோம். அதையும் நிறுத்தி விட்டார்கள். நான் இதை உங்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே விடுக்கிறேன். அவர்கள் வந்தால் எல்லா நல்ல விஷயங்களையும் நிறுத்திவிடுவார்கள்.

ஸ்டாலின் தமிழ்நாட்டிற்காகப் பல வளர்ச்சி திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். அது தொடர வேண்டும். மத்தியில் பா.ஜ.க.வுக்கு எதிராக வலிமையான குரலாக ஸ்டாலின் இருக்கிறார். அவர் தமிழ்நாட்டிற்கு மட்டுமில்லை.. ஒட்டுமொத்த தேசத்திற்காகவும் குரல் கொடுக்கிறார். தொகுதி மறுசீரமைப்பு மசோதா மூலம் நாட்டை உடைக்க பார்த்தார்கள். ஆனால், அதற்கு எதிராகவும் ஸ்டாலின் குரல் கொடுத்தார். பா.ஜ.க.வின் திட்டத்தை முறியடித்தோம்”.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் போல் வேறு தலைவர் கிடைக்க மாட்டார்!**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினைப் போல உங்களுக்கு ஒரு தலைவர் கிடைக்க மாட்டார். தமிழ்நாட்டுக்கு ஏராளமான நன்மைகளை செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவுக்காகவும் பாடுபடுகிறார். தமிழ்நாடு மக்களின் மத்தியில் பேசுவதை பெருமையாக நினைக்கிறேன்.

“நான் டெல்லியில் இருந்து வந்திருக்கிறேன், ஏனென்றால் ஸ்டாலின் என்னுடைய சகோதரர். அவர் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அதுமட்டுமல்லாமல், உங்கள் குடும்பத்திற்கு நிறைய வளர்ச்சி பணிகளை செய்திருக்கிறார். உங்களுடைய குழந்தை களுக்காக அதிக பணிகளை செய்து வருகிறார். உங்கள் குடும்பத்தின் உடல்நலத்திற்காகவும் கல்விக்காகவும் நிறைய உழைத்து வருகிறார். அவர் மாதிரி ஒரு தலைவர் உங்களுக்கு கிடைக்கப்போவ தில்லை. அதனால் தான் அவருக்காக வாக்கு சேகரிக்க நான் வந்திருக்கிறேன். நான் டெல்லி முதல்வராக இருந்த போது, ஒரு நாள் தமிழ்நாட்டின் முதல்வர் அலுவலகத்தில் இருந்து அவர் மூலமாக எனக்கு கால் வந்தது. டெல்லியில் செய்துள்ள நல்ல பணிகளை பார்க்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார். நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன்.

**மக்களுக்காக உழைக்கும் முதல்வர் ஸ்டாலின்!**

பொதுவாக முதலமைச்சர்களிடம் அதிகமாக அகங்காரம் இருக்கும். யாரும் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்கு செய்துள்ள நல்ல பணிகளை பார்க்க மாட்டார்கள். ஆனால் ஸ்டாலினுக்கு அகங்காரம் இல்லை. அவர் மக்களுக்காக உழைக்கிறார். அவர் டெல்லிக்கு வந்து நாங்கள் மேம்படுத்திய மருத்துவமனைகள், பள்ளிகள் அனைத்தையும் பார்வையிட்டார். அதன் பிறகு அவர் என்னை தமிழ்நாட்டுக்கு வர வேண்டும் என அழைப்பு விடுத்தார். நானும் தமிழ்நாட்டுக்கு வந்து இங்கு செய்துள்ள நல்ல பணிகளை பார்த்தேன். சுமார் 1.3 கோடி குடும்ப பெண்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 ஊக்கத்தொகை பெறுகிறார்கள். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்கள் இதை பெற்றிருக்கவில்லை. இங்கே முதல்வரின் காலை உணவுத் திட்டம் உள்ளது. இதன் மூலம் பள்ளிக் குழந்தைகள் காலை உணவைப் பெறுகிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலமும் இதை செயல்படுத்தவில்லை. பள்ளியில் தேர்ச்சி பெற்று கல்லூரி செல்லும் பெண்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 பெறுகிறார்கள். நாட்டிலுள்ள வேறு எந்த மாநிலத்திற்கும் இது கிடைப்பதில்லை.

**பா.ஜ.க.வை வெறுக்கும் தமிழ்நாட்டு மக்கள்!**

என்.டி.ஏ என்றால் நியூ டெல்லி அலைன்ஸ் (New delhi alliance). என்.டி.ஏ என்பது பா.ஜ.க மற்றும் அதிமுக அல்ல, என்.டி.ஏ என்பது பா.ஜ.க மட்டும் தான். அதிமுகவை பா.ஜ.க அபகரித்துவிட்டது. பீகாரில் என்ன நடந்தது என்று பாருங்கள். நேற்று வரை நிதிஷ் குமார் முதல்வராக இருந்தார், ஆனால் இன்று அவர் ராஜ்ய சபா எம்.பியாக பதவியேற்றுள்ளார். அவருக்கு நடந்தது மாதிரி தான் அதிமுகவுக்கும் நடக்கும். அதிமுக மூன்று துண்டுகளாக உடைந்துள்ளது. அதை பா.ஜ.க முழுமையாக கைப்பற்றிவிட்டது. தமிழ்நாட்டை அபகரிக்க வேண்டும் என பா.ஜ.க நினைக்கிறது. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.கவை வெறுக்கிறார்கள்”.

இவ்வாறு டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் பேசினார்.

---

# இந்திய தலைவரானார் ஸ்டாலின்!

## ‘நக்கீரன்’ தலையங்கம்!


இந்திய தலைவரானார் ஸ்டாலின்!

நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறைச் சட்டம் தோல்வியடைந்த சேதி கேட்டதும் பிரச்சாரத்தில் இருந்த தமிழக முதல்வர் ஸ்டாலின், “மோடி அரசு கொண்டுவந்த கருப்புச் சட்டத்தை படுதோல்வியடையச்செய்து டெல்லியை தமிழ்நாடு வீழ்த்தியுள்ளது. ஆணவ பா.ஜ.வின் வீழ்ச்சியை, நாம் தொடங்கி வைத்திருக்கிறோம்” என்று உற்சாகக் குரல் கொடுத்தார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் முடிந்த நிலையில், திடீரென சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஏப்ரல் 16ஆம் தேதி கூட்டப்போவதாக அறிவித்து, அதில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுசீரமைப்பு மசோதா, யூனியன் பிரதேசங்களில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மூன்றையும் ஒன்றாக நிறைவேற்றப்போவதாக அறிவித்தது.

நல்லவேளை… நிறைவேறியிருந்தால் இந்த நாடு, நாடாக இல்லாமல் நாசமாகியிருக்கும். தமிழகம், மேற்குவங்கம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் தேர்தல் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில் இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பற்றிய அறிவிப்பு வந்ததுமே, அனைவருக் கும் முந்திக்கொண்டு முதல் ஆளாக தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்த மசோதாக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ‘இந்த மசோதாவை கொண்டுவந்தால் ஒன்றிய அரசுக்கு எதிராகப் போராடுவோம். பழைய தி.மு.க.வை நீங்கள் பார்க்கநேரிடும்’ என்று எச்சரித்ததோடு, மசோதா நகலை தீயிட்டுக் கொளுத்தி வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றினார். வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றவும், சட்டையில் கருப்புக்கொடி குத்தவும் தொண்டர்களுக்கும் அழைப்புவிடுத்தார்.

தமிழக முதல்வரே மசோதா நகலைத் தீயிட்டு எரித்தது இந்தியா முழுக்க எதிர்க் கட்சிகளின் கவனத்தை ஈர்த்து, இந்த மசோதா குறித்த எதிர்ப்பலையை ஒருங்கிணைத்தது. இந்தியா கூட்டணித் தலைவர்கள், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்தத் திட்டத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து மசோதாவுக்கு எதிராக தங்கள் கருத்துக்களை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தன.

திட்டமிட்டு தொகுதி மறுவரையறை மசோதாவுடன், மகளிருக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவையும் இணைத்து இம்மசோதாவை எதிர்க்கும் கட்சிகளை மகளிருக்கான இடஒதுக் கீட்டை எதிர்ப்பதாக ஒரு சதி பிரச்சாரத்திலும் ஆும்கட்சி இறங்கியது. இத்திட்டத்தை தி.மு.க. வுடன் இணைந்து எதிர்க்கவேண்டிய எடப்பாடியோ, தமிழ்நாட்டுக்கு பாதிப்பு நேராது என அமித்ஷா உத்தரவாதம் கொடுத்திருக்கிறார் என சாக்குபோக்கு சொல்லி முதல்வர் கருப்புச் சட்டை அணிந்ததை கேலி செய்தார். தமிழக நலனைப் புறக்கணிக்கத் துணிந்தார்.

இந்த மசோதாக்களை நியாயப்படுத்தி அமித்ஷா, மோடி ஆகியோர் பேசிய நிலையில், அதைக் கடுமையாக எதிர்த்த கனிமொழி எம்.பி.யும், தோழர் சு.வெங்கடேசனும், ராகுலும், பிரியங்காவும் பேசினர். மசோதாவின் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் 352 வாக்குகள் விழவேண்டிய நிலையில் 298 வாக்கு களே விழுந்தன. மசோதா தோல்வியடைந்தது. இதையடுத்து அரசியலமைப்பு மீதான தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் கருத்து தெரிவித்தார்.

தமிழக நலன் பறிபோகாது என அமித்ஷா உத்தரவாதம் கொடுத்திருக்கிறார் என்று எடப்பாடி சொன்ன அதே அமித்ஷா, மக்களவை விவாதத் தின்போது ஒன்றிய அரசு அமல்படுத்தும் மசோதா வால் தமிழகத்துக்கு 6 எம்.பி. தொகுதிகள் பறி போகும் என அவரே தன் வாயால் ஒப்புக்கொண்டு, எடப்பாடி முகத்தில் கரியையும் பூசினார். தொகுதி மறுவரையறையின் சூட்சுமம் தெரியாமல் வாயைக் குடுத்து மாட்டிக்கொண்டார் எடப்பாடி.

தென்னிந்தியாவின் பிரதிநிதித்துவம் பறிபோவதிலிருந்து தமிழக முதல்வர் ஸ்டாலினின் முயற்சி காப்பாற்றியிருக்கிறது. பா.ஜ.க.வின் சதியை வெற்றிகரமாக முறியடித்து இந்திய தலைவரானார் ஸ்டாலின்.

**-நன்றி: நக்கீரன் ஏப்.20**

---

# தமிழ்நாட்டில் பற்றவைத்த தீ, அமெரிக்காவில் தெரிந்தது!



வரலாற்றுத் தொடக்கம்: செப்டம்பர் 6, 1994 அன்று திருப்பத்தூரில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, இந்தியச் சட்ட நகலை எரிக்கும் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய எனது தாத்தா எஸ்.எஸ். தென்னரசு திராவிடப் போராட்டக் களத்தின் அழியாத அடையாளம்.


நான் கதிர் தென்னரசு, திராவிட இயக்கத்தின் மூத்த உடன்பிறப்புகளில் ஒருவராகவும், அறிஞர் அண்ணாவின் தம்பியாகவும், கலைஞர் அவர்களின் நெருங்கிய நண்பராகவும் விளங்கிய, மறைந்த S.S. தென்னரசு அவர்களின் பேரன். கடந்த 12 ஆண்டுகளாக நான் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்து வருகிறேன். சென்ற வாரம் என் அலுவலகத்தில் ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு நடந்தது.

தினமும் காலை வேலை தொடங்கும் முன் சுமார் 10 நிமிடங்கள் ஒரு ‘ஸ்டாண்டப் மீட்டிங்’ (Standup Meeting) நடத்துவோம். அன்றைய வேலைத் திட்டங்களைப் பற்றிப் பேசுவதே அதன் நோக்கம். அந்தச் சந்திப்பிற்கு சில நிமிடங்கள் முன்னதாகவே சென்றுவிட்டால், அரசியல் அல்லது விளையாட்டு எனப் பொதுவான சுவாரஸ்யமான விஷயங்களைப் பேசுவோம். அப்படி ஒரு நாள், நான் இரண்டு நிமிடம் முன்னதாகவே சென்றிருந்தேன். அங்கு எங்கள் நிறுவனத்தின் நிதித்துறை முதன்மை அதிகாரி (CFO) மற்றும் ஐரோப்பா, தென் அமெரிக்காவைச் சேர்ந்த மூத்த தலைமை அதிகாரிகள் (Senior Leadership Colleagues) இருந்தனர்.

**எங்கள் CFO இரண்டாம் தலைமுறை அமெரிக்கர் (2nd Generation American), ஆனால் அவரின் பூர்வீகம் இந்தியா. 2024ல் நமது கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களை நான் சான் பிரான்சிஸ்கோவில் சந்தித்துப் பேசியது ஒரு பேசுபொருளாக இருந்ததால், அதை அவர் நினைவில் வைத்திருந்தார். என்னைப் பார்த்தவுடன் அவர், ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளிதழில் தான் பார்த்த ஒரு செய்தியைப் பற்றிக் கேட்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் கருப்புச் சட்டை அணிந்து, இந்திய ஒன்றிய அரசின் ‘தொகுதி மறுவரையறை’ (Delimitation Bill) மசோதாவை எரித்துத் தனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறாரா என்று வியப்புடன் கேட்டார். இத்தகைய அடையாளப் போராட்டங்கள் (Symbolic Protests) இப்போதும் கூட உங்கள் மக்களிடையே, இந்தத் தலைமுறையிலும் நடக்கிறதா என்று அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.**

ஒரு கழக வாரிசாகவும், தமிழனாகவும் எனக்கு இதில் பெரிய ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால், இத்தனை மைல்கள் தாண்டி இது உலகளாவிய கவனத்தைப் பெற்றிருக்கிறது என்பது எனக்குப் பெருமையாக இருந்தது. இந்த போராட்டங்களும், கருப்புச் சட்டையும், சட்ட நகலை எரிப்பதும் எங்கள் கழக கலாச்சாரத்தில் இருந்த ஒன்று என்பதால் இது எங்களுக்குப் புதியதல்ல என்று அவர்களிடம் கூறினேன். ஆனால் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இது ஒரு பெரிய ஆச்சரியமாகவும், ஒரு தத்ரூபமான குறியீடாகவும் தெரிகிறது. இந்தியாவின் பிற பகுதிகளில் இருப்பவர்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கலாம், ஆனால் இப்போதும் கூட இந்தத் தலைமுறையிலும் எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்த மனப்பாங்கு எங்களிடம் குறையவில்லை. இது காலங்காலமாகத் திராவிடக் கலாச்சாரத்தில் இருந்ததே ஆகும். எனது தாத்தா S.S. தென்னரசு அவர்கள், 1964ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு (AntiHindi Protest) திருப்பத்தூரில் தலைமை தாங்கி இந்தியச் சட்ட நகலை எரித்து அதற்காக ஒரு வருடக் கடுங்காவல் சிறை வாசம் அனுபவித்தவர். அப்போது தமிழகம் முழுதும் கழகத் தலைவர்கள் சட்ட நகலை எரித்து, கருப்புக்கொடி ஏற்றிப் போராடினார்கள். அது அன்று பேரறிஞர் அண்ணா பற்ற வைத்த நெருப்பு. இது வெறும் ஒரு காகிதத்தை எரிப்பதல்ல; இது ஒரு பெரிய கருத்து (It’s about making a statement). அதிகாரத்தில் இருக்கும் ஒரு மசோதாவையோ அல்லது சட்டத்தையோ ஒரு தலைவன் எரிப்பதும், அதை அனைவரும் சுற்றி நின்று அங்கீகரிப்பதும் திராவிடக் கலாச்சாரத்தில் மிகவும் இயல்பானது. இது ஒரு மிகப் பெரிய புரட்சியைக் குறிக்கும் சின்னமாகிறது.

அந்தச் சந்திப்பில் இருந்த மற்ற அமெரிக்க அதிகாரிகளும் என்னுடன் உடன்பட்டனர். அரசியலமைப்புச் சட்ட நகல்களை எரிப்பது (Burning Constitutional Bills) என்பது அமெரிக்க அடிமைமுறை எதிர்ப்புப் போராட்டங்களிலும் (Abolitionist movement), உள்நாட்டுப் போரின் பின்னணியிலும் (Us Constitution and Civil War) ஒரு முக்கியப் பகுதியாக இருந்திருப்பதை அவர்கள் வரலாற்றுப் புத்தகங்களில் படித்திருப்பதாகக் குறிப்பிட்டனர். இன்றும் அந்தப் போராட்டக் குணம் நடைமுறையில் இருப்பதைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றனர்.



தலைமுறைகள் கடந்த கழகப் பயணம்: 2024–ல் சான் பிரான்சிஸ்கோவில் நமது கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது.

நீதிக்காகவும், உரிமைக்காகவும், சுயமரியாதைக்காகவும் நாம் எப்போதும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நம் குரலை உயர்த்த வேண்டும். நமது கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த நடவடிக்கை என்னை உற்சாகப்படுத்தி, அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் (Remember to voice against suppression) என்பதை மீண்டும் நினைவுபடுத்திவிட்டது. பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட நம் திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த 75 ஆண்டுகால வரலாற்றில் பல போராட்டங்களைக் கடந்து தமிழ்நாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது. அன்று அண்ணா பற்ற வைத்த அந்த லட்சிய நெருப்பை, மிசா காலங்கள் முதற்கொண்டு இன்று வரை நமது முதலமைச்சர் அடுத்த தலைமுறைக்குத் தடையின்றிப் பரப்பிக் கொண்டிருக்கிறார். கடந்து வந்த இந்த 75 ஆண்டுகள் எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் வரப்போகும் அடுத்த 75 ஆண்டுகளும் இந்த திராவிடப் பேரியக்கம் இதே வீரியத்துடன் தொடர்வது.

பேரறிஞர் அண்ணாவின் ‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்’ என்ற முழக்கத்திற்கேற்ப, எத்தகைய அடக்குமுறைகளையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, கலைஞர் அவர்கள் கண்ட ‘நவீனத் தமிழ்நாடு’ என்ற கனவை நனவாக்கும் வகையில் நாம் பயணிப்போம். எங்களது திராவிட வேர்களையும், சமரசமற்ற போராட்டக் குணத்தையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நமது முதலமைச்சர் வெற்றிகரமாகக் கடத்திக் கொண்டிருப்பது எனக்கு மட்டற்ற பெருமையைத் தருகிறது.

**தீ பரவியது! மீண்டும் வாக்களிப்போம் உதய சூரியனுக்கே!**

**-கதிர் தென்னரசு** கலிபோர்னியா (அமெரிக்கா),
(மறைந்த முன்னாள் அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் பேரன்)